# காலிக்கேடில்

மாஸினா -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலக் குயில்

Acc 133
பொது சன நூ... நி...
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

மானிலா

13

Donated By A.C.L.G
Jaffna.
30/10/1995

"மணி ஓசை" வெளியீடு 4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ காலக்குயில் — கவிதைத் தொகுப்பு
★ நூலாசிரியர்: மாணிலா
★ முதற்பதிப்பு: 22 மே 1993
★ வெளியீடு: மணிஓசை,
12, சென். பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
★ அட்டைப்படம்: ஓவியர் ஆர். இராசையா
★ விலை: 30/-

□ "KĀLAK KUYIL"
Collection of Poems by MANILA
□ First Edition 22 - May - 1993
□ Published by "MANI OOSAI" Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் இதயம் இனிக்கிறது!

இன்றைய காலச் சூழலில் துவண்டு போய் துடிக்கும் மனங்களோடு இக்கவிமலர் இணைந்து இசைபாடப் போவதை நினைந்து என் இதயம் இனிக்கிறது!

என் கவிதைகளில் சந்தோஷமும் சோகமும் கைகோர்த்துச் சலசலக்கின்றன. உங்கள் உள்ளங்களோடு கதை பேசுகின்றன. சமுதாயச் சிறையின் தடை மீறி உறவாடுகின்றன. ஆங்காங்கே அலைமோதி பிளந்து போயிருக்கும் இதயங்களின் உயிர்த்துடிப்பை கவியாக உங்கள் கண்களுக்கு காட்டித் தருவதில் நான் சந்தோஷமடைகிறேன்.

என் கவிதைகளில் பொய்மைக் கருத்துக்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்க நான் விரும்பவில்லை. நான் தரிசித்த பிரச்சினைகளின் மையமே இக்''காலக்குயில்'' எனும் கவிமலர்.

இக்கவி மலர் சமுதாய அழுத்தங்களை அகற்றுவதில் ஆர்வப்படுகின்றது. தேசத்தின் அவலநிலை, சமுதாயத்தின் கண்மூடித்தனமான நடவடிக்கைகள், காதல், பெண்களின் எழுச்சிகள் போன்ற பலதரப்பட்ட கருத்துக்களைத் தாங்கி உங்கள் கைகளில் தவழ்ந்து இதயங்களை இசையினில் நனைக்கப் போவதை நினைந்து என் இதயம் இனிக்கிறது!

நான் எழுத ஆரம்பித்த காலங்களில் எனக்கு ஊக்கமும் உற்சாகமும் தந்து காலக்குயில் இசைபாட உதவிய வி. பி., செம்பியன் செல்வன், ஜோசப்பாலா, ஓவியர் திரு. ஆர். இராசையா ஆகியோர் என்றும் என் நன்றிக்குரியவர்கள்.

ஏற்கனவே வெளியான கவிதைகளோடு புதியனவும் இணைந்து உங்கள் கண்களுக்கு காட்சி தருகின்றன. உங்கள் விமரிசனங்கள் என் இலக்கிய வயலில் புதிய பூக்களை மலர வைக்கும்!

''விக்னேஸ்வரவாசம்''
மானிப்பாய்

மானிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்கவி பற்றியும்
# அவர் கவிதை பற்றியும்

"குனிந்து நடந்து
மடமை காத்து
முடங்கிக் கிடந்தது
போதும், போதும்
அஞ்சி அஞ்சி அடுப்படியில்
தஞ்சம் கொண்டது
போதும், போதும்.
எழுந்து வா
பெண்ணே
எழுந்துவா
உன்
பிரவேசம்
ஒரு பிரவாக மெடுக்கட்டும்!
சிணுங்காதே!
தீயாய்
இனி மாறு!
எழுந்து வா!
எம் புகழை
எழுதுகோலால்
அளந்து வைப்போம்
சிரித்து மயக்கி – உனை
சின்னாபின்னமாக்க
காத்திருக்கும்
காளையரைக் கண்டால்
காறி உமிழ்ந்து விடு!"

ஆம்; இந்த இளைய மலர் இன்றைய பெண்களின் நிலையைப் பேசியுள்ளது.

காலங்காலமாக எமது சமுதாயத்தில் படிந்துள்ள தூசியைத் துடைப்பதற்கு பேனாவை தமது துடைப்பமாக்கியுள்ளார் இக் கவிஞர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சல சலத்துக் கொண்டோடும் கால வெள்ளத்துடன் சில அழுக்குகளும் கரைந்தோடத்தான செய்கிறது. ஆனபடியினால் தான் இக் கவிஞரை எம்மால் அடையாளம் காண முடிந்திருக்கிறது.

பெண்ணைப் பேசாதே என்கிற காலம் போய்விட்டது. பெண், உணர்ச்சியுடன் விழிப்பை ஏற்படுத்தும் அர்த்தத்துடன் பேசுவதை எம்மால் - ஆண்களால் - ஜீரணித்துக் கொள்ள முடிகிறது.

இதுவும் மாறிவரும் காலச் சூழல்தான். இந்தப் பெண் கவிஞர் தன் பேனாவின் வாய் திறந்து பெண்களின் சார்பாக சப்தமிட்டுள்ளார்.

இவரின் சில கவிதைகள் சிரிக்கின்றன. சில கவிதைகள் ஆவேசத்துடன் எம்மை தட்டியெழுப்புகின்றன.

'மனதில் உறுதி வேண்டும்' என்று பாடிய பாரதிதான் ஞாபகத்திற்கு வருகிறான்.

மனமெங்கும் சந்தோஷம் கொப்பளித்து நுரை பொங்குகின்றது. எங்கள் ஈழப் பெண்களின் மனசுகள் உறுதியடைகின்றன.

நாளாந்தம் எம் மத்தியில் ஆண்களின் தயவுடன் துணையுடன் வாழத்தான் வேண்டும். என்று வளர்க்கப்பட்ட பெண்கள் சிணுங்குவதையும் கண்ணீர் விடுவதையும் மறப்பதற்கு பழக்கப்படுகிறார்கள்.

''புதிய சரித்திரம் சமைத்து
பூவையர் நாம்
புரட்சிக் கொடியேற்றுவோம்''

இப்படி எழ வேண்டிய உணர்வு எல்லாப் பெண்களுக்கும் வரவேண்டும்.

இக் கவிஞர் மேலும், மேலும் வளர்ந்து உலகத்தின் குரலாக ஒலிக்கப் போகின்றார்.

22 - 04 - 93

வவுனியா - திலீபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னது இன்னபடி

'கைப்பிடிக்குள் சிக்கிய காற்றென' புதுக்கவிதை அதன் படைப்பாளியையும், அக்கவிதை பற்றிப் பேச வருகின்ற விமர்சகனையும் ஒருங்கே, எப்போதும் தடுமாற வைப்பது என்பது இன்றைய நிதர்சன நிகழ்வுகளாகி விட்டன.

புதுக்கவிதை பொருள் மரபிலும், உருவவமைதியிலும், யாப்பமைவிலும், பாவமைதியிலும் புதுப்புதுக் கோலங்களை கொள்ளத் தொடங்கத் தொடங்க இத்தகைய தடுமாற்றங்கள் புதுக்கவிதையின் இலக்கியப் பண்புகளாகி விட்டன.

படைப்பவனுக்கும், விமர்சகனுக்குமிடையே இத்தகைய இடைவெளி தோன்றக் காரணம் என்ன?

அவசரத்தில் அள்ளித் தெளித்த கோலமென, அவ்வப்போது தமது கல்வி நிலைகளுக்கு அப்பால் நின்று, சொந்த நலன் கருதி வெளியிடும் இலக்கியக் கோட்பாடுகளும், கொள்கை விளக்கங்களும்,

தமிழில் செய்யுள், கவிதை, பாடல் என்று வகைப்படுத்தப்பட்டிருக்கும் பாவின வகைகளின் வேறுபாடுகளை விரிவாக விளக்கி வாசகர் உணரச் செய்யாமை,

பாரதி இலக்கண வரம்புகளை உடைத்தெறிந்தான் என்ற தடாலடி விமர்சனம் பாரதி கொணர்ந்த எளிய, இலகு கவிதை முயற்சிகளையும் வசனகவிதை முயற்சிகளையும் இனம்பிரித்துக் காட்டாத பாரிச்வாத நிலைமை,

ஃபிரிவேர்ஸ், பிளாங்வேர்ஸ், வேர்ஸ்லிப்ரே என்று ஐரோப்பிய மொழிகளிலே வழங்கப்பட்ட இலக்கிய வடிவங்களையும் பாரதியின் சுயேச்சா கவிதை முயற்சிகளையும் இணைத்துப் பேசி புதுக்கவிதை இன்னதென்று தெரியா நிலையில் புதிதாக வளர்ந்து வரும் சந்ததிகளை ஆர்வம் கொள்ளச் செய்தமை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலைத் தேயக் கவிஞர்களான டி. எஸ். எலியட் (பாழ் நிலம்) வால்ட் விட்மன் (புல்லின் இதழ்கள்) போன்றோரின் புதுக்கவிதைத் தமிழாக்கங்கள் கருத்து மொழி மாற்றநிலையில் தமிழில் வந்த காரணத்தால் புதுக்கவிதையின் உருவம் உரைநடை சார்ந்ததாகவே விளக்கியமை, இதே போன்றே பிறகவிதைகளின் மொழி பெயர்ப்புகளும் - பலஸ்தீனக் கவிதைகள், பாப்லோ, நெருடா, மாயாகோவ்ஸ்கி போன்றோரின் இத்தகைய விபத்துகளினின்றும் இன்று வரை தப்பாமை,

தமிழிற்கு புதிதான - ஜப்பானிய மரபுக் கவிதையிலிருந்து இடையேமிடுங்கி எடுக்கப்பட்ட சில கவிதாவரிகள் தனிப்பாடல்களாக ஹைகூ கவிதைகள் என்றழைக்கப்பட்டு தமிழிற்கு அறிமுகம் செய்யப்பட்ட விதமும் அதுவும் 'புதுக்கவிதை' இனத்தைச் சார்ந்தது என்ற எண்ணம் நிலவுவது.

புதுக்கவிதையை பொருளாலோ, யாப்பாலோ, கவிதா உணர்வினாலோ, தீர்மானிக்காமல் 'அதன் வடிவமைப்பைக் கொண்டு தீர்மானிக்கும் பத்திரிகைத்தனங்கள்.

தென்னிந்தியாவிலிருந்து வரும் மு. மேத்தா, வைரமுத்து போன்றோரின் கவிதை நூல்கள், இளம் உள்ளங்களில் கவிதாரசனையையும் இந்த ஊடகமே எம் உணர்வினை வெளியிட ஏற்றது' என்ற எண்ணத்திறனையும் ஊட்டுவது.

இத்தகைய சகல செல்வாக்குகளையும் 'காலக்குயில்' கொண்டிருக்கிறது. மானிலா மாறிவரும் உலகச்சூழலினிடையே தமிழீழத்தின் நிலை, போக்கு, எதிர்காலச் சிந்தனைகளைக் கொண்டு தனது எண்ண எழுச்சிகளை கவிதானுபவ வரிகளிடையே கொணர முயற்சிப்பது தெரிகிறது. பிரச்சனைகளை பூதாகரமாக உள்வாங்கிக் கொண்டு, ஏற்கனவே தெரிந்தும் பெற்றுக் கொண்டுமுள்ள சொல்வளங்களைக் கொண்டு தார் மீகத் தவறுகளையும் போர்க்காலக் குற்றங்களையும் தம் மளவில் விமர்சிக்க முனையும் இளம் பெண்பாற் கவிஞரின் சத்திய ஆவேசக் குரலாகக் கேட்கிறது.

செம்பியன் செல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணிக்கை

தமிழ்ச்சுவை ததும்பும்
தமிழ் மண்ணிலே - எனை
அரும்பாக
மலர வைத்து
இன்று -
இளையவள்
விழியினை
நீரினில் -
நனைய வைத்து,
எட்டாத வானுக்கு
ஏகிவிட்ட
என் தந்தை
'கணபதி பிள்ளை' எனும்
கருணை வடிவின்
காலடியில் - இக்
கவி மலரினை
காணிக்கை செய்கின்றேன்.

— மானிலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடியலே வா...

என்
இதயப் புத்தகத்தின்
நினைவு அத்தியாயங்களாய்
நித்தியமாய்
வாசிக்கப்படும்
வாசகமே!
இரவோடு
போராடி
விடிலுக்காய் வலை
விரித்திருக்கிறேன்
பொழுது மட்டும்
புலருவதாய் இல்லையே,
உனைக் கண்டேன்,
அந்நாள் முதல்
காணவில்லைப் பொன்னுதயம்
பூபாள ராகந்தனைக்
கேட்டிடத்துடிக்குது இதயம்
பூவே – என்
புலரும் காலைப் பொழுதே
இரவைக் கலைத்திட
விரைந்தோடி வா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ... மனிதர்களே

கண்ணிழந்த மனிதா – நீ
கதையற்ற கனவு தான் காண்கிறாய்
எண்ணற்ற உள்ளங்களை – ஏன்
ஏளனம் செய்யத் துடிக்கிறாய்?
பகுத்தறிவு தானில்லையோ - நீ
பள்ளி தான் செல்லவில்லையோ?
பட்டமதைப் பெற்றென்ன
பண்பு தான் உனைச் சேரவில்லையோ?
துயருறும் கதைகளை நிறுத்தாயோ
தூய உளந்தனை அறியாயோ?
வதந்திகளை வளர்ப்பதையே – நீ
வசந்தமென நினைத்தாயோ?
ஒரு வழிப்பாதையில் செல்பவரை – நீ
ஒரு முறை கலங்க வைத்திடுவாய்
சிந்தனையற்ற ஓவியமா? – நீ
சிந்தையினைச் சிதறடிக்கும் யந்திரமா?
வேடிக்கை பார்க்கும் ஜடப்பொருளோ
வேதனைப் படுத்தும் செந்தணலோ!
அற்பர்களானோரை நெறிப்படுத்த
அவனியில் இறைவன் கண் விழிப்பான்
அன்றுடன் அழியட்டும் அக்கிரமம்
அவனியில் தோன்றட்டும் அமைதிவழி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய தாகம்

அழகாய் ஆறு பாய்கிறது
தாகம்
தலைக்கு மிஞ்சுகிறது,
கைதியாய் நிற்கிறோம்
கைகளால் தாகத்தை
தணிக்க இயலாமல்...
தேசம் நமது
ஓடும் ஆறு நமது
கைகள் நமது
தாகம் நமக்கு!
விலங்கு மட்டும்...
விடுதலை யுணர்வினால்
விலங்கினைத் தகர்ப்போம்!
இனிப் போர் தொடுப்போம்
இதய தாகம் தணிப்போம்!

□

# தோல்வி

நிழலாக தொடராதே
நிஜமாக மலராதே
நினைவில் – நீ
நிலைக்காதே
மலரெனைத் தழுவாதே
வெற்றியின் வாடை
எப்போதும்
என் பக்கமே!

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகமான சோகங்கள்

சோகங்களை
சுமப்பதிலும்
சுகம் தான்!
இன்பங்கள் என்னோடு
இணைந்தாலும்
இரு கண்கள் வேண்டும்!
காலமெல்லாம்
கண்களில் நீர் வேண்டும்!
உறவே
உன்
தோள்களில் சாய்ந்து
சுகமாக அழவேண்டும்!

□

## அழகு

பொன்னிலும்
பொருளிலும்
போலிப்பாங்கான
பேச்சிலும்
தெரிவதல்ல அழகு
மென்மையான உள்ளத்தின்
உண்மையான முறுவலில்
தெரிவதே
தெய்வீக அழகு!

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உன் கடிதங்கள்

இதோ
எத்தனை
மழை இங்கு பொழிகிறது,
இரத்த மழை...
கண்ணீர் மழை...
பூவே
உன் கடிதம்
என் கைகளை ஸ்பரிசித்தபோது
இங்கு
வான் மழையல்லவா
பொழிந்தது!
ஓ...
தபால் கவருக்குள்
கடிதத்தோடு
மேகங்களையும்
வைத்து அனுப்பிவிட்டாயோ!
□

# கவிஞன்

சோக ஆற்றினில்
சுகமாக நீந்தி
சமுதாய சாக்கடையில்
சந்தன வாடையை
மலர வைக்க
சமூகச் சிறையில்
ஆயுட் கைதியாய்
அடைக்கலமானான்
□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புது வசந்தம்

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காய்
இலங்கையரசு இவ்வையகமெங்கும்
பேச்சு வார்த்தை நடத்துகிறதாம்!
தமிழர் வாழ்க்கையோ இன்னும்
தளர்வுற்றுத் தள்ளாடுகையில்
தர்மிஸ்டப் பேச்சுக்கள் தாராளம்!
வான்மழையின்மையின் வரட்சி கண்டு
வாடிய மக்களுக்காய் நம்மரசு தரும்
விமானப் பக்ஷிகளின் குண்டுமழை!
பாடசாலை போகும் மாணவர்கள்
பாதி வழியிலே பரிதாப மரணங்கள்,
பச்சை வயல் வெளிகள் யாவும்
பயங்கரமாய் தீப்பற்றும் அவலங்கள்!
வீடுகளின் கூரைகள் தரையில் உறக்கம்
வீதிகளில் மக்கள் பதுங்கு குழியில் உறக்கம்!
அஹிம்சையை அவமதித்த அரசினை எதிர்த்து
ஆயுதமேந்திய வேங்கையர் கையில்
வீர சுதந்திரக் கொடிகள் பறக்கும்!
விடுதலை விருந்தினை உண்டு களித்திட
வீரத்தமிழினம் வீறுநடை போடுகையில்,
முத்தமிழ்க் கலைகள் மடைதிறக்கும்,
முக்கனிச் சாறுகள் சுவைபரப்பும்!
இளைய தலைமுறையின்
இளைப்பாறா இலக்கியங்கள்
ஈழத்தை இலக்கிய களமாக்கிடும்!
வானமும் மழையைப் பொழிந்திடும் – புது
வசந்தமும் இங்கே நிலைத்திடும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சென்று வா ...

இனிய நண்பனே,
இது நமது பூமிதான்!
அதிர்ந்து போகாதே
அவை பிணங்கள் தான்
நீ கடந்து வா
துப்பாக்கி வேட்டுக்கள்
துளைப்பதற்குள் துணிந்து வா!
எனது தேசம்
அழிந்து போவதை அறிந்து போ!
நியாய விருக்ஷத்தின்
நிழல்கள் விரியட்டும்
இதோ...
ஈழத்தின் வயல்வெளிகள்
இறந்தவர் சடலங்களும் இங்கேதான்
அறுவடைக்காய் அல்ல,
அரசின் இனவெறிக்காய்!
பார்த்தாயா
பாடசாலைக் கட்டடங்கள்
தரைமீது பள்ளி கொள்வதை
மாணவர் கல்விக்காய்
மாண்பு மிகு சனாதிபதி
கல்வி நூல்களும் கற்கை நெறிகளும்
உண்ண உணவும்
இலவச சீருடையும்
ஈழத்திற்கும் தருகிறார்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கே தெரிவது ஊர்வலமல்ல
போர்க் காலமதில்
பொருளாதாரத் தடைவிதித்த
போலியரசு தரும்
நிவாரணத்திற்காய்
நிரையில் நிற்கும் பொதுமக்கள்.

□ ● □

பால்மா இல்லாது
பசியால் துடித்து
பச்சிளம் பாலகன் பரிதாப மரணம்!
நண்ப, கலங்காதே
பட்டினியால் பரிதவித்து
பாயிலே சுருண்டு
மரணித்த மானிடர் எத்தனையோ?

□ ● □

இலங்கையரசின்
இலவச மருத்துவமனை,
மருந்துகள் இன்றி
மக்கள் மரணிக்கும் மரணகூடம்.
மரணத்தின் மடியில்
மக்கள் துயில்கையில்
சுதந்திர சதுக்கத்தில் நின்று
சனாதிபதி
சுகாதார வசதிகள் செய்து
சூழலைப் பாதுகாக்க உத்தரவிட்டாராம்
தேசியக் கொடி நிழலில்
தமிழ் மக்கள் உடல்களை
விதைத்துவிட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரக் களையோடு வீராப்புப் பேசும்
இலங்கையரசு
பேச்சு வார்த்தை மூலம்
பிரச்சினை தீர்க்குமாம்!

வெற்றி விருக்ஷத்தில் ஏறிடும்
வேங்கையர் - விடுதலைக்கனியினை
சுவைப்பது நிச்சயம்
இழப்புக்கள் இயற்கைதான் - நாம்
வெல்வதும் இயற்கைதான்
நீ - சென்று வா
கழுகுகள் கண்களில் சிக்காது
கவனமாய் சென்றுவா!

□

## புனிதப் பூவே ...!

என்னைச் சுற்றி
எந்நேரமும்
நெருப்பு - ஆனாலும்
நெஞ்சுள்
பூக்களின்
பூப்பு...!
நீ
அப்பூக்களில் ஒன்று!
இனி
பூக்களினால்
நெருப்பைச் சுடுவேன்!

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறப்படு

போரின் சப்தங்களால்
பொழுதுகள் யாவும்
புழுதிபடிந்தனவாய் புலர்கின்றன.
அரசியல் சாசனத்தின்
அதி முக்கிய அம்சம்
அப்பாவி மக்களை
அகதியாய் அகற்றலோ!
அட
நீ – மட்டும்
இன்னும் உறங்கிக் கொண்டிருக்கப் போகிறாயா?
ஊர் எரிகிறது
புகை தெரிகிறது
இப்போது
உன் எல்லைக்கு
உத்தர வாதம் தான்
நாளை...
நாடெரியும் வேளை
உன் வீடும் தான்!
தீயவர் கொடுமையில்
தாயகம் தவிப்பது தெரியவில்லையா?
தேசத்தின் சுதந்திரம் உனக்கில்லையா?
விடுதலைக் கூக்குரல் கேட்கவில்லையா?
காரிருள் கலைக்க எழுந்திடாய்
கண்களை இனியும் திறந்திடாய்
பாயோடு உன்னைப் பொசுக்கிட
பாலிசப் பறவைகள் வருமுன்பு
தெருவினில் இறங்கி நடந்திடு
தேசத்தைக் காக்கப் புறப்படு!

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை வெளிச்சம்

வைகறைப் பொழுது
வரவேற்கிறது
புலரும் பொழுதை அவமதியாதே!
போர்வை களைந்து
பாயோடு – உன்
சோம்பலைச் சுருட்டி எறி!
மென்மையாக வீசும்
மெல்லிய தென்றல் – உன்
மேனியை வருடவில்லையா?
காலையின் மகிமையை
கண்கள் காண்பதேயில்லையா?
ஏய்... எழுந்துவா
காலையை உனக்கு
காட்டித்தருகிறேன்
இன்னுமா உறக்கம் – உன்
விழியிலே மயக்கம்
களங்கமின்றி
ஒளிக்கதிர் பரவி நிற்கும்
ஆதவனின் அழகைப் பார்!
இல்லக் கதவை மட்டுமல்ல - உன்
இதயக் கதவையும் திறந்து விடு
சூரியக் கதிர்களால்
சுமை குறைந்து உள்ளம் சுகம் பெறட்டும்!
புலர்ந்த பொழுதை உனதாக்கு
புதுயுகம் காண
வழி தேடு!

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்போதும் இப்படித்தான்

மெல்லிய காற்று
மேனியை வருட,
கடற்கரை வெண்மணலில்
நீள நடக்கின்றேன்,
வேகமாய் வரும்
வெள்ளலைகள்
என் பாதச் சுவடுகளை
திருடிக் கொண்டு திரும்புகின்றன.
கீழ் வானம் காயமுற்று
மேனியெங்கும் இரத்த வெள்ளம்
என் கண்கள் இன்னும் அளக்கின்றன,
அசைந்தாடியவாறு
ஒன்றோடொன்று சாய்ந்து
ஓய்வெடுத்திருக்கும் ஓடங்கள்,
தோற்றுப் போன மந்திரியாய்
தேம்பியழும் தென்னை மரங்கள்,
வரிசையாய் பூத்துக் குலுங்கி நிற்கும்
பூவரசுகள் இருளை வரவேற்க
மௌன கீதம் இசைப்பனவாய்......
இருளவனோடு போர் தொடுக்க
நிலா மகள் உலா வருகிறாள்
கடல் மலர்களின் கண்ணீர்த் துளிகள்
வான வீதியில் நக்ஷத்திர முத்துக்களாய்
ஜொலித்துக் கொண்டிருந்தன
பரீட்சார்த்தமான
பயணத்தைத் தொடர
பயணிகள் யாருமில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயமெனும் போர்வையைக் களைந்து
பாசலைப் பிரித்து பாணைத் தொடுகையில்
திடீரெனத் தாக்கும்
தீப் பிளம்புகள்!
மழை முகில் சூழ்ந்ததாயில்லை,
மின்னலின் அறிகுறியில்லை
வெடியோசையில்
வெள்ளலைகள் கொந்தளித்தன
உள்ளம் வெம்மித் துவண்டது
வெளிச்சத்தோடு
வான் கழுகுகள்
இரை தேடிய வண்ணமாய்
இரைந்து கொண்டிருந்தன,
கட்டவிழ்ந்த ஓடங்கள்
கடல் நோக்கிப் பயணம்
ஓ......
பூத்துக்குலுங்கிய
பூவரசுகள் கிளைகளால்
போர்த்துப் படுத்திருக்க......
அலைக் கரங்களின்
அரவணைப்பில் பூக்கள்
அள்ளிச் செல்லப்படுகின்றன
சுதந்திர தேசம் தான்
மெதுவாக... சுவாசிக்கிறேன் – ஏனெனில்
சுதந்திரம் எனது பிரதேசத்திற்கு
விஸ்தரிக்கப்படவில்லை!
காற்றிலே – என்
கன்னங்களைத் தழுவிய கடதாசி
நிலாமகளின் துணையோடு
படித்துப் பார்க்கிறேன்
தலைப்பு மட்டும் கண்களுக்கு
தட்டுப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரையோரப் பிரதேச எல்லையின்
பாதுகாப்புக் கருதி
கிளாலிக் கடற் பகுதியில்
படையினரால்
ஊரடங்கு அமுல்...
சுதந்திர தேசம் தான்!
ஆனால் - எங்கள்
பிரதேசங்கள் மட்டும்
எப்போதும் இப்படித்தான்!

□

* *1993 ஜனவரி 2 - ம் திகதி கிளாலி அசம்பாவிதத்தை நினைந்து.*

## காவியக் காதல்

நினைவுகள் முதலாகி
கனவுகள் செலவாகி
கவலைகள் வரவாகி
கண்ணீரில் முடிவாகி
கவிகளில் கருவாகி
காவியத்தில் உருவாகி
நெஞ்சங்களில் இடமாகி
நேசத்தின் பொருளாகி
தேசத்தின் புகழ்காக்கும்
காலத்தை வென்ற
காவியக் காதல்!

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓ... சமுதாயமே!

ஓ... சமுதாயமே!
வேகமாய் வளர்கிறாய்
கலியுகம் தோன்றி
கம்பியூட்டர் மயமாகி
கலைகளும்
நிலை தடுமாறும் காலமல்லவா?
என்ன தான் முன்னேற்றம்!
நீ
கண்டு பிடிப்புக்களை
கண்டு களிக்கிறாய் ... ஆனால்
மரபு ரீதியான — உன்
வழக்காறுகளில் இருந்து
வழுகுவதாய் இல்லையே?
சங்கத் தமிழ் நூல்களிலே
சாதிகள் நூறு கண்டதுண்டோ?
நீ
உயர்வுகள் தாழ்வுகள்
உருவாக்கி – உயர்
மனிதத்தின் மாண்பினை
மறப்பதேனோ?
ஆணும் பெண்ணும் பேசிவிட்டால்
அரும்பியது காதலென்பாய்,
ஏழைகளைக் கண்டுவிட்டால்
எட்டி நீயும் நடந்திடுவாய்
ஏக்கங்கள் தீர்ப்பதற்கு
எப்போதும் தயங்கிடுவாய்;
பெண்ணுக்கு சுதந்திரம்

Acc 133
பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்பாய்
வீட்டிலே – உன் பெண்ணை
பூட்டி வைப்பாய்!
நிலையிலா அழகினை
மதித்திடுவாய்
நிலையாம் அன்பினை
மிதித்திடுவாய்
சாதி மத பேதங்கள் இல்லையென்பாய்
சாவிலும் காதலரை சேரவிடாய்!
கொஞ்சமா உன்
கொடுவினைகள்
கோடியுண்டு!
பாடலாம் வார்த்தையில்லை!
பாட்டாளி படுந்துயர்
பார்க்கமாட்டாய்,
பசித்தோர்க்கு
உணவளிக்க முனையமாட்டாய்
சீதனம் எனும்
சாதனத்தால்
பாவையர் வாழ்வினைப்
பறித்திடுவாய்,
பேச்சினில் மட்டும்
சீர்திருத்தம் செய்திடும்
பணியினைத் தொடர்ந்திடுவாய்;
உன்
வழக்காறுகளிளின்றும் விலகி வா!
வசந்தத்தின் வாடையை
சுமந்து வா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேள்வித் தீ...

வான வீதியில்
வலம் வரும்
முகிலினங்கள்
முட்டி மோதுகையில்
குரல்வளை நெரிக்கப்படும் குளவிகளின்
குமுறல் காதினைக் குடைகையில்;
கணவன் கைதியாகி
கண்ணான மனையாள்
காடையர்க்கு விருந்தாகி
பருந்தின் கையில் குஞ்சாகி
பதறும் பாவையரை நினைக்கையில்;
தமிழினப் பாலகனை
தார்ப்பீப்பாவில் தவழப் போட்ட
தர்மிஸ்ட வாதிகளின்
அதர்மத்தை அறிகையில்;
தமிழர் தேசங்கள்
தீப்பற்றி எரிந்து
தமிழ் மக்கள் தேகங்கள்
தாறுமாறாய்க் கிழிகையில்;
தளதளக்கும் தேகமும்
பளபளக்கும்
பட்டு வேட்டியும்
சரிகைச் சால்வையும்
சந்தனப் பொட்டுமாய்
பாராளுமன்றத்தில்
பாராட்டுப் பெறும்
தமிழ்த் தேசாபிமானிகளின்
தேச உணர்வின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிரத்தைக் காண்கையில்;
பொறுத்திடார்!
இனியும் ஒருகணம்
பொறுத்திடார்!
முகமூடி மனிதரின்
முகவரியடைந்து
முற்றாக வேஷத்தைக் களைந்து
முத்தான தேசத்தைக் காக்க
முரசு கொட்டும்
வேங்கையர் கூட்டத்தின்
வேட்டொலி கேட்கையில்;
என்
விழியினை நனைத்திடும் உன்
விடுதலைப் பாடல்
''பயமெனும் பேய்தனையடித்தோம்
பொய்மைப்பாம்பைப் பிளந்துயிரைக்
குடிப்போம்''
தேசத்தின் விடுதலையை
நேசித்த பாவலனே
பாரதி!
பார்த்தாயா நமது தேசத்தை!
உன்
பாடல்களை மிதித்த வண்ணம்
பாஸிச அரசினர் புரியும்
பாதகச் செயல்களை;
புதுமைப் பாவலனே!
வேள்வித் தீ வளர்த்து
விடுதலைப் பாதையில்
இறங்கி விட்டோம்
உடமைகள் உயிர்கள்
யாவுமிங்கிழக்கினும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலையுணர்வினை
நெஞ்சினில் நிறைத்தோம்
வேங்கையர் பூண்ட
விடுதலையாகத்தில்
பாதகஞ் செய்வாரை
வேள்விகள் செய்வோம்
வேங்கையர் நாங்கள்
விழித்திட்டோம்
வீர சுதந்திர உணர்வினை
இழந்திடோம் – இனி
இழப்புக்கள் கண்டு நாம்
அஞ்சிடோம்
ஈழ தேசத்தில் நம் கொடி
ஏற்றுவோம்!

□

## உன் ஞாபகங்கள்

இந்த
அழகிய பிரபஞ்சத்தில்
எனக்கு
மிகவும் பிடித்த
தேவதை நீதானம்மா?
உலகம்
என் பெயரை
உச்சரிக்கும் ஒவ்வொரு
நிமிஷமும்
உன் ஞாபகம்
எனக்குள் பன்னீர் தெளிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊமை ராகம்

நிலா சுடர் விடும் புல் வெளியில்
நிராசையுடன்
தடுமாறிடும் ஜீவனொன்று
நிஜம் தேடுதே
நின்மதியற்று,
சிந்தனையாற்றிலே
சென்று
சரணடைந்து
சிதைந்த உண்மைகளை
தேடிக் கண்டு கொண்டு
மாயை உலகினிலே
உரைக்க முயல்வதென்ன?
மரண்பற்ற மனிதரிடை
வாழ நினைப்பதென்ன?
மானிட செவிமடுப்பு – இங்கு
மலருமானால்
மௌனம் கலைந்து ஒரு
விடிவு பிறந்து விடும்!

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய படிமங்கள்

பழரசம் பருகாமல்
படுத்திருக்கும்
பணக்காரப் பண்ணையாருக்கு
பசியெடுக்கவில்லை,
பாழும் வயிறின்
பசிதாங்க முடியாது
பச்சரிசி வாங்கப் பணமின்றி
பழங்கஞ்சி தேடும்
பரம ஏழைக்கு
தூக்கம் பிடிக்கவில்லை,
பூமி ஒன்று
புலரும் பொழுதுகள் ஒன்று
மனித மனச் செடிகளில்
மலரும் எண்ணங்கள்
மட்டும் மடையற்றவை,
அதனால்த் தான்
வாழ்க்கையின்
வரலாற்று அத்தியாயங்களில்
புதிய படிமங்கள்
பூத்துநிற்கின்றனவோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய பாதையில் பூவையர்

குனிந்து நடந்து
மடமை காத்து
முடங்கிக் கிடந்தது
போதும், போதும்
அஞ்சி அஞ்சி அடுப்படியில்
தஞ்சம் கொண்டது
போதும், போதும்.
எழுந்து வா
பெண்ணே
எழுந்துவா
உன்
பிரவேசம்
ஒரு பிரவாக மெடுக்கட்டும்!
சிணுங்காதே!
தீயாய்
இனி மாறு!
எழுந்து வா!
எம் புகழை
எழுதுகோலால்
அளந்து வைப்போம்
சிரித்து மயக்கி – உனை
சின்னாபின்னமாக்க
காத்திருக்கும்
காளையரைக் கண்டால்
காறி உமிழ்ந்து விடு!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணால் எரித்து விடு!
கதை பேசும்
கண்களென – உன்
கண்களை கவிவடித்து
கவியிலே லஞ்சம் தந்து
செவியிலே சீண்டிடும்
சிந்தனையாளர்களை
சிறையிலே தள்ளி
சமுதாய வெளியில் நிறுத்திடு!
உன்
அழகை வருணித்து
அடிமை விலங்களித்த
கொடுமை சமூகத்தை
கண்டு கொள்ளாதே;
நீ
எழுந்து வா
நேராய் நிமிர்ந்து வா!
அதோ தெரிகிறதே
அகிலம்......!
அழகான பக்ஷிகள்
அலையும் அழகைப் பார்!
பூ முடித்துப்
பொட்டு வைத்து
உன்
இடை தொட்டுக்
கவி கண்ட
பேனாக்களின் முனைகளை
புயலெனப் பிடுங்குவோம்!
புதிய சரித்திரம் சமைத்து
பூவையர் நாம்
புரட்சிக் கொடியேற்றுவோம்!
□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உறங்காத உள்ளங்கள்

பூவொன்று
புயலோடு போராட
விண்மீனொன்று தரையோடு
விளையாட
கடலலையொன்று
கரையோடு கதைபேச
கவியொன்று வடிக்கின்றேன்
உனக்காக......
கண்ணே உன்
கண்ணோரம்
கண்ணீர் ஏன்?
கண்ணாளன் வருவேனே
கரை சேர்க்க
போதும் உன் சோகங்கள்
போகட்டும் நம்
நேசங்கள்
நிலவோடு உரசட்டும்!
கடலலை என்றும்
கரையோடு இணையாது,
கற்சிலை என்றும்
உயிர் பெற்று வராது,
உன்
அன்பென்ற
நெஞ்சத்தை மறவாது
உயிருள்ள
பெண்ணுள்ளம்
உறங்காது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதைகள் சிறைப்படார்

திருமணங்கள் சொர்க்கத்தில்
நிச்சயிக்கப்படுவதாக யார் சொன்னார்?
இன்றைய திருமணங்கள்
சீதனச் சந்தையின்
உச்சத்தில்த் தானே
நிச்சயிக்கப்படுகின்றன!
வீடு வேண்டும்
காணி வேண்டும்
மேனி மூட நகைவேண்டும்
இன்னும் வேண்டும்
இனாமாக இலட்சம் மூன்று
சந்தையிலே நாயகரை
தரகு பேசி வாங்கிய பின்
மணவறையில் தாலியோடு
மா(ப்)பிள்ளையாய்க் காத்திருப்பார்
விலைப்படாத நாயகர்கள்
விரைந்திடுவார் வெளிநாடு
ஆண்டு இரண்டு ஓடிவிட்டால்
அவர் மதிப்பு ஐந்து இலட்சம்
சீர்வரிசை மட்டுமல்ல – பெண்
சீதையாயும் இருக்க வேண்டும்;
நவீன இராமர்களே!
நடப்பதெல்லாம் நீதிதானோ?
மேடையிலே ஏறிநின்று
மெய் மறந்து பேசினாலும்
சீதனச் சந்தையிலே நீரும்
சிலையாக நிற்பதேனோ?

பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேனாக் காரர்களே!
சீதனப் பேய்தனைக் கலைப்பதாய்
சீர்திருத்த எழுத்துக்கள் வேண்டாம்!
இராம வேஷத்து இராவணர்களே!
சீதைகள் இனியும் சிறைப்படார்!

# நீதானே...!

ஏய்!
இந்த மொட்டு
உன்
பார்வை பட்டு
மலர்ந்திருக்கிறது
ஆச்சரியம் தான்!
இரும்புக் கரங்களினால்
முடியாத வேலையை
ஒரு தென்றல்
இரகசியமாகச் செய்து விட்டது!
நான்
கவிதையை
எதிர்பார்த்துப் போனேன்
கையில் ஈரம் சுட்டது!
குனிந்து பார்த்தேன்
அட்டா!
அது அழகிய கண்ணீர்த்துளி!
எனக்குத் தெரியாமலேயே
என்
இதயத்தைப் பிடுங்கிச் சென்றது
நீதானே...! நீதானே...!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னும் உனைத் தொடவில்லையா?

இன்னும்
உன்னைத் தொடவில்லையா?
என் – எழுத்து...
சூரியனைக் கூட
ஈரப்படுத்தும்
என் கண்ணீர்பாடல்
உன் இருதயத்தை
துளைக்க வில்லையா?
எனக்குத் தெரியும்
உன் – இருதயம்
இரும்பல்ல; என்பது
எனக்குத் தெரியும்...
ஆனாலும் என்ன,
பூவின் கதவைத்
திறந்து வைப்பது கூட
பூகம்பத்தின் வேலையாய்
போய் விட்டதே!
நீ எப்போது
சம்மதத்துடன்
தலையசைக்கப் போகிறாய்?
என் – மனவாசல்
துருப்பிடிக்கும் முன்னர் – நீ
துயிலெழுவாயா?
உன் சம்மதப்பூ
வீசப்பட்ட பின்னர் தான்
இந்தப் பறவை
சஞ்சரிக்கத் தொடங்கும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடைநிழல் வேண்டாம்!

கொழும்பு நகரிலே
கோல்பேஸ் கரையினிலே
கோடை வெயிலின்
குரூரத் தகிப்பினிலே
குடைநிழல் விரிப்பினிலே
குடும்பம் நடத்தும்
தமிழின ஜீவன்களை
நினைந்து
என் பேனா
தலை குனிகிறது!
தமிழர் கலாச்சாரத்தை
தயவு செய்து
தந்து விடுங்கள்!
காலிமுகக் கடற்கரையில்
கப்பலேற்ற – எம்
கலாசாரம் என்ன –
நிவாரணமா?
சுதந்திரப் போரினை மறந்து
சுகம் காண நினைந்து
ஒதுங்கி
ஓடிய பாதங்களே!
நிவாரணம் மட்டும் வரட்டும்;
தமிழர்
கலாசாரத்தை
கப்பலேற்ற வேண்டாம்!
குடைநிழல் வேண்டாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுக போகிகளே,
சுதந்திரத்தை மறந்த
சூறாவளிகளே!
சுற்றத்தோடு வாருங்கள்.
குடைநிழல் வேண்டாம்.
குடிசைகள் தந்து
குடியமர்த்துவோம்.
தமிழர்
கலாசாரம்
கால மெல்லாம் வாழ வேண்டும்.
காவியங்கள் காணவேண்டும்!

□

# புதிய பூமி!

பூமித் தாயின்
பூமுகம்
வாடக் கண்டு,
வான மங்கை
மேனியெங்கும்
வைகை நதி சூடிக்கொள்ள
நீர்க் கம்பிகள்
நிலம் நனைக்க
புழுதி செத்துப்
புது மணம் கமழ்ந்தது பூமி!

□

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வசந்தத்தை வரவேற்க வா!

உன் பாதையில்
என் பாதங்கள்
பதித்த சுவடுகள்
பள்ளமாயிருப்பது
உன்
பார்வை தேடியே
இதய வானிலே நீந்தும்
உதய தாரகையே
உயிர் எழுதும் கவிவரிகள்
உனக்காகவே...
அழகே
அழியாத கோலங்களாய்
ஆலம் விழுதுகளாய்
நெஞ்சில்
அலை மோதும் நினைவினை
அழித்திட வழியேது?
அஸ்தமனங்கள் நீடிப்பதில்லை
அதிகாலை ஆதவன் உன்
பனிப் போர்வையை
ஆக்கிரமிக்கப் போவதையறியாயோ?
வீசும்
தென்றலும் என்
கவியின் சோகம் பாடும்
வசந்தம் அழைக்கிறது
வாழ்க்கை இனிக்கிறது
சோகப் போர்வையைக
களைந்து
வைகறை நிலவை
வரவேற்போம் வா!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெஞ்சமெல்லாம் நீயே

உயிரே – என்
உறவே!
இனிய தென்றலில்
என்
இனிய கீதத்தை
இசை மாலை தொடுத்தேனே –
உன்
செவி வந்து
சேரவில்லையோ?
என்
இதய வானிலே
உன்
நினைவு நக்ஷத்திரங்கள்
நர்த்தனம் புரிந்து - என்னை
நிலை தளர்த்துகின்றன,
கால நிலை மாறியதில்
கார் காலம் கவிந்து
விழி மேகங்கள் பொழிகின்றன!
வானிலையறிக்கையும் – உனை
வந்தடைய வில்லையோ?
வாழ்வென்பதோ ஒரு முறை
வசந்தங்கள் வந்து போகும்,
வறண்டு போன
வயல் வெளியில்
வாடிய நெற்கதிராய்
வதங்கிக் கிடக்கையிலே
வான் மழை பொழியாதோ - புது
வசந்தமும் வீசாதோ?
ஓயாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒலியெழுப்பும் உயிர்ப்பான
கடலலைகள்
கரைமீது – உனக்காய்
கவியெழுதும்
கண்ணே – உன்
கண்கள் காணவில்லையோ?
உன்
பாச ஊஞ்சலில் ஆடிட
பாலைவனத்தினில்
பயணிக்கும் - என்
பாதங்கள்
பதித்த சுவடுகள் ஓராயிரம்!
காவியக் கவியே,
உனக்காக -
வார்த்தைகளால்
வானவில்லை வளைத்து
வண்ண மாலை சூட்டக்
காத்திருக்கிறேன்
கலங்காதே!
உயிரே –
கலங்காதே!
உறங்காத என் கண்கள்
உன்னைத்தேடி விழித்திருக்கும்,
சிறகடித்தும் பறக்கின்றாய்
சிந்தையில் நீ நிறைகின்றாய்
எண்ணமெல்லாம் நீயாகி
எழுந்து விட்டாய் கவியாகி
இதத்தினில் இனிமேலும்
இருவரிடை பிரிவேது
காலமெல்லாம் என்னோடு
கைகுலுக்கி நடைபோடு!

Acc 133
பொது சன நூலகம்
நல்லூர் பிரதேச சபை,
கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கானம் பாடும் காலக்குயில்

காலத்தின் நிகழ்வுகளை
கவியாக பாடிவரும் – இந்த
''காலக்குயில்'' - தன்
பார்வையில் பட்டவற்றை
படைப்புகளால்
பதிவாக்க
புனை பெயருள் மறைந்து
புதுக்கவிதை வடிக்கிறார் – இந்த
மானிலா
இவருக்கு
''நான்'' பட்டறையும்
சஞ்சிகையும்
பயிற்சிக் களமாக
படைப்புலகில்
அறிமுகமாகினார்.
இன்று
பெண்மையின் மன உணர்வால்
பொய்மையை பொசுக்கி
புதிய பூபாளம் இசைக்கிறார்.
இவர்
கவியை கவர்ந்து
காலக்குயிலாக
கானம் பாடி இசைக்க
துடிக்கும் இதயமும்
துணையாக சேர்கிறது – அந்த
இணைப்பில் புதுராகம் இசைக்க
மனதார வாழ்த்துகள்!

— ஜோசப்பாலா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org